**செய்தி வெளியீடு எண்: 048** **நாள்: 18.01.2019**

# செய்தி வெளியீடு

இந்தியத்தேர்தல் ஆணையத்தின் அறிவுரைக்கிணங்க 01.01.2019–ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு, தீவிர முறையிலான வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தல் முதலியவற்றுக்கான படிவங்கள் 01–09–2018 முதல் 31–10–2018 வரை பெறப்பட்டன.

2. முன்பு அறிவித்த நீட்டித்த கால அட்டவணையின்படி, இறுதி வாக்காளர் பட்டியல்கள் 21–01–2019 அன்று வெளியிடப்பட்டிருக்க வேண்டும். பிழைகளற்ற வாக்காளர் பட்டியல்கள் தயாரிக்கப்பட வேண்டும் என்ற நோக்கில், சேர்த்தல், நீக்கல் குறித்த தகவல்களையும் ஆலோசனைகளையும் பகிர்ந்துகொள்ளுவதற்காக வாக்குச்சாவடி நிலை அலுவலர் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் வாக்குச்சாவடி நிலை முகவர்(BLO-BLA)களின் இரண்டு கூட்டங்கள் நடத்தப்பட்டன. இதன் தொடர் நடவடிக்கையாக வாக்காளர் பட்டியல்களில் காணப்படும் தவறுகள், ஒன்றுபோலுள்ள பதிவுகள் ஆகியவற்றைக் கண்டறிந்து உரிய களவிசாரணை மேற்கொண்டு இரட்டைப்பதிவுகளை நீக்கி, இந்தியத் தேர்தல் ஆணையத்தின் "ஈ.ஆர்ஓ நெட்" மென்பொருள்மூலம் அச்சிடும் பணியை மேற்கொள்ளவேண்டும் என்று இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. இப்பணிகளுக்கு மேலும் சிறிது கால அவகாசம் தேவைப்படுவதால் இறுதி வாக்காளர் பட்டியல்களை 31.01.2019 அன்று வெளியிட இந்தியத் தேர்தல் ஆணையம் அனுமதியளித்துள்ளது. அதன்படி தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் 31.01.2019 அன்று இறுதி வாக்காளர் பட்டியல்கள் வெளியிடப்படும்.

**தலைமைத் தேர்தல் அதிகாரி,**
**தமிழ்நாடு**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**